உடபலாத பிரதேச சபை
கண்டி மாவட்டம்

-----------------------------------------------

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைபிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்துநிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் உடபலாத பிரதேச சபையின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3.1 கணக்கீடு குறைபாடுகள

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது,ரூபா 283,870,671 பெறுமானமொன்று திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | கணக்குகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டின் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது, சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் பொது களஞ்சிய கொள்வனவு ரூபா 1,691,850 செலவின விடயங்களுக்கு செலவு வைக்கப்பட்டதால், செலவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்குகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | அத் தவறுகளை எதிர்காத்தில் சரி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | ஆண்டின் மூலதன உதவி பெறுவனவு ரூபா 128,851 குறைத்து சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | கணக்குகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டின் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது, சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | ஆண்டு இறுதியில் பெற வேண்டிய ரூபா 2,278,777 ஆன விளம்பர பலகை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 10 நிறுவனங்களுக்கு தற்போது வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதுடன், அனைத்து நிலுவை கட்டணத்தையும் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்கள் பிரகாரம்,காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மற்றும் துணை பதிவேடுகள் பிரகாரம், அப் பெறுமதிக்கிடையில் ரூபா 1,000,000 இணங்காமை நிலவியது. | குறித்த மீதிகளின் வித்திதயாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளை விஞ்சிய கிடைக்க வேண்டிய மீதிரூபா 4,240,218 ஆனது. | கிடைக்க வேண்டிய மீதிகளைதீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | 05 ஆண்களை விஞ்சிய கடை வாடகை நலுவையை பதிவழிக்க விடய பொறுப்பு அமைச்சிக்கு கோரிக்கை விடப்பட்டிருந்த போதும், அது முடியாது என அறிவிக்கப்பட்டிருந்தது. |

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

| | | |
|---|---|---|
| 05 ஆண்டுகளை விஞ்சிய வேலை கடன் கொடுத்தோர் மீதி ரூபா 956,810 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | 01 ஆண்டும் 05 ஆண்டும் இடையிலான மீதிகளுக்குரிய நிறுத்தி வைக்கப்பட்ட பணம் தொடர்பாக அறிவூட்டப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

1.3.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பதிவேடுகள், மற்றும் கோவைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாததால், கூட்டுத் தொகை ரூபா 606,610 ஆன04 கணக்கு விடயங்கள்கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

1.4 இணங்காமை

------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும்முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

----------------------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் | | | |
| 158(அ)(ஆ) | கொடுப்பனவை புறக்கணித்த நபர்களின் அசையும் மற்றும் அசையாத சகல ஆதனைகளையும் இரத்துச் செய்து நிலுவை கட்டணத்கை அறவிட நடவடிக்ககை எடுத்திருக்கவில்லை. | சபை சட்டத்திற்கு இணங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடமாடும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைபடுத்தப்பட்டதுடன், அங்கு கொடுப்பனவை புறக்கணித்த நபர்களின் ஆதனைகளை இரத்துச்செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| நி.பி. 104(4) | 2010 ஆண்டின் போது,விபத்திற்குள்ளான வாகனமொன்று தொடர்பாக 2018 திசெம்பர் மாதம் வரையும் பரிசோதனையொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நி.பி. 104(4) பரிசோதனையை மேற் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| (இ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி கோவை | | | |
| (i) 218 விதி | வருடாந்தம் சகல காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதி மற்றும் நிர்வாக விதிகளுக்கு இணங்கி செயற்பட வேண்டும் | 2019 ஆண்டிலிருந்துகாணி மற்றும் கட்டிடங்கள் கணிப்பாய்வொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதி விதி 59 மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 150(1)-152 பிரிவுகள் | அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள கைத்தொழில்கள்/வியாபாரங்கள் மற்றும தொழில்கள் தொடர்பாக கணிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதி மற்றும் நிர்வாக விதிகளுக்கு இணங்கி செயற்பட வேண்டும் | அனுமதிப்பத்திர கணிப்பாய்வுதற்போது நடைபெறுகிறது. |
| (ஈ) | 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 இலக்க உள்ளுராட்சி திணைக்கள சுற்றறிக்கை. | 05 வருடங்களுக்கு ஒரு முறை செய்ய வேண்டிய வீத வரி மதிப்பீடு 2005 ஆண்டின் பின் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையிற்கு இணங்கி செயற்பட வேண்டும் | புதிய பெறுமதி மதிப்பீடொன்றை வழங்க பெறுமதி மதிப்பீட்டு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (உ) | 2000 இல் 53 ஆம் இலக்க மற்றும் 1988 இல் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இல் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களிற்கு இணங்க 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக் க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல். | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டிய 12 கைதொழில்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையிற்கு இணங்கி செயற்பட வேண்டும் | சுற்றாடல் அனுமதிப்பத்திர கணிப்பாய்வு 2018 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. |

1.5 போதிய அதிகாரத்துடன் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 182 ஆம் பிரிவிற்கு இணங்காது 03 வேலைகளின் கடன் பட்டோர் பெறுமதி ரூபா 150,360 மற்றும் ரூபா 10,000,000 ஆன முதிரைக் கட்டண பெறுமதியொன்று கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 182 ஆம் பிரிவிற்கு இணங்கி செயற்பட வேண்டும். | இத்தகைய குறைபாடுகள் மீண்டும் ஏற்படாதவாறு கவனித்திற் கொள்வதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானசபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 38,455,620ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 67,801,354ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாகமுன்வைக்கப்பட்டமதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீத வரி மற்றும் குத்தகை | 6,117,000 | 2,917,135 | 2,992,084 | 2,405,485 | 3,534,000 | 1,969,320 | 2,009,921 | 4,414,656 |
| ii | வாடகை | 3,703,200 | 3,647,760 | 3,203,395 | 2,177,225 | 2,935,000 | 1,986,504 | 1,929,696 | 774,983 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,955,100 | 1,856,875 | 1,687,675 | - | 2,000,150 | 1,629,090 | 1,629,090 | - |
| iv | ஏனைய வருமானம | 37,857,500 | 32,685,098 | 12,686,564 | 53,268,554 | 27,400,000 | 60,325,325 | 41,098,472 | 41,784,343 |
| | கூட்டுத் தொகை | 49,632,800 | 41,106,868 | 20,569,718 | 57,851,264 | 35,869,150 | 65,910,239 | 46,667,179 | 46,973,982 |

#### 2.2.2 வீத வரி மற்றும் குத்தகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீத வரி** | | |
| (i) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலவிய நிலுவை மற்றும் ஆண்டினுள் பில் இடப்பட்ட ரூபா 3,407,363 ஆன மொத்த தொகையிலிருந்து ரூபா 2,091,010 வை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமான சேகரிப்பின் முன்னேற்றத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். | நடமாடும் சேவைகள் மற்றும் ஆதனங்களை இரத்துச்செய்வதன் மூலம் இரண்டு பிரதேசங்களிளும் நிலுவை பணம் சேகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 2018 திசெம்பர் 31 திகதிக்கு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக நிலவும் மீதி ரூபா 817,489 ஆக இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நடமாடும் சேவைகள் மற்றும் ஆதனங்கள் இரத்துச்செய்வதன் மூலம் இரண்டு பிரதேசங்களிளும் நிலுவை பணம் |

சேகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ) நீர் கட்டணம்

| | | |
|---|---|---|
| அதிகார பிரதேசத்தின் உப அலுவலகங்களில் 240 அலகுகளிலிருந்து 2005 ஆண்டு முதல் நிலுவையாக இருந்த ரூபா 82,145 ஆன நீர் கட்டண மீதியொன்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமான சேகரிப்பு முன்னேற்றத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். | அதிகார பிரதேசத்தின் உப அலுவலகங்களில்நிலுவை நீர் கட்டணத்தை எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆண்டின் போது, நீண்ட கால அடிப்படையில குத்தகை வழங்கப்பட்டிருந்த புஸ்ஸல்லாவ பொது சந்தை கட்டிடத் தொகுதியின் 11 கடையறைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 139,500 தொகை மற்றும் கடைகளில் தற்காலிகமாக வசிக்கும் வியாபாரிகளிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,329,654 ஆன கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமான சேகரிப்பு முன்னேற்றத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். | நிலுவையை அறவிட எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பதுடன், நடமாடும் சேவை செயற்படுவதாகவும் அறிவிக்கிறேன். |
| (ஆ) அதிகார பிரதேசத்தில் 63 நபர்களிடமிருந்து மற்றும் 05 கடையறைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 420,715 தொகையினை 06 வருடங்களிற்கு விஞ்சிய காலமாக அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந் நிலுவையை பதிவலிக்கக் கோரி, நியாயப்படுத்தல் அறிக்கையொன்றுடன் விடய பொறுப்பு அமைச்சரிற்கு அனுப்பியதுடன், அதனை மேற்கொள்ள முடியாதென் அறிவிக்கப்பட்டுள்ளது. |

2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அதிகார பிரதேசத்தில் நூதனசாலை ஒன்றை குத்தகைக்கு எடுத்த தரப்பினரால் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வியாபார அனுமதிப்பத்திரம் வழங்குவதை ஒழுங்காக மேற்கொள்ள வேண்டும். | 2019 ஆண்டிற்கு வியாபார அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 ஆண்டில் கணிப்பாய்வு அறிக்கை பிரகாரம், அதிகார பிரதேசத்தில் 26,156 சதுர அடியுடைய 355 விளம்பர பலகைகளை இனங்கண்டிருந்த போதும், அவை பதிவிடப்பட்டிருக்கவில்லை. | அனைத்து வருமானத்திற்காகவும் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். | எதிர் வரும் ஆண்டின் போது, பதிவேடுகள் பேணப்பட நடவடிக்கை எடுக்கிறேன். |

2.2.5 ஏனைய வருமானம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 நீர் உத்தேச திட்டங்களிலிருந்து பல வருடங்கலாக அறவிட வேண்டிய ரூபா 816,000 ஆன நீர் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த செயலற்ற 07 நீர் உத்தேச திட்டங்களில் நிலுவை பணம் தொடர்பாக மகா சபைக்கு சமர்ப்பித்து தீர்மானம் எடுக்கப்படும். |
| (ஆ) | செயற்படும் நிலையில் நிலவிய 14 நீர் உத்தேச திட்டங்களின் பெற வேண்டிய ரூபா 1,239,000 நிர் கட்டணம் நீண்ட காலமாக நீலுவையாக இருந்தது. | நிலுவை நீர் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனைத்து நிலுவை தொகை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

2.2.6 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 திதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,050,224ஆனதுடன், முத்திரைக் கட்டணம் ரூபா 52,218,330 ஆனது. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்,மக்கள் நலன், இலகுமற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

வேலைகள் மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பாதீட்டினூடாக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 5,000,000 பெறுமதியான 03 உத்தேசங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த காலபகுதியினுள் உத்தேசங்களை நடைமுறைபடுத்துதல். | கடந்த ஆண்டில் மேற்கொள்வதற்கு முடியாமலிருந்த அவ் உத்தேசங்களை இந்த ஆண்டின் போது, மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

3.2 முகாமைத்துவவினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டில் பாதீடு பிரகாரம், சமுதாய அடிப்படை சங்கங்களின் தேவைகள் மீது சபை நிதியத்தினால் 36 பாதைகள் அபிவிருத்திற்காக ஒதுக்கீடு ஏற்படுத்திக்கொன்டிருந்த போதும், அவையின் 31 வேலைகளின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | பாதீடு பிரகாரம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கநைள டைமுறைபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | சமுதாய அடிப்படை சங்கங்கத்தின் 36 உத்தேசங்களிலிருந்து 05 யினை 2018 ஆண்டில் நடைமுறைபடுத்தியுள்ளன. |
| (ஆ) | 2014 ஆண்டில் ரூபா 425,659 செலவில் நிர்மாணிக்கபப்பட்டிருந்த முன்னணி அலுவலக கட்டிடம் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தியிருக்கவில்லை. | நோக்கத்திற்கான வேலைக்கு கட்டிடத்தை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ்வாண்டு முடிவடைய முன்னர் முன்னணி அலுவலகத்தினால் ஆற்றப்பட வேண்டிய சேவைகளை மக்களுக்கு வழுங்க நடவடிக்கை எடுக்கிறேன். |

3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 30 பதவிகளில் வெற்றிடங்கள்காணப்பட்டன. | பதவிகளில் வெற்றிடங்ளை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒப்பந்த அடிப்படையில் மீது ஊழியர் ஆட்சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் நிலவிய 19 சமுதாய நீர் கருத்திட்டங்களில் மற்றும் 14 சபை நீர் கருத்திட்டங்களில் நீர் மாதிரி பரிசீலனை செய்து குடிப்பதற்கு என உறுதிப்படுத்திருக்கவில்லை. | பிரதேச சபை சட்டம் பிரகாரம், நீர் மாதிரி பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீர் மாதிரி பரிசீலனையொன்றை செய்துகொள்ள ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

3.5 சொத்துக்கள் முகாமை

3.5.1 சொத்துக்கள் பதிவிடப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான நிலையான சொத்துக்கள் தொடர்பாக பதிவேடு பேணப்பட வேண்டும். | 2019 ஆண்டு முதல் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

3.5.2 சொத்துக்களிலிருந்த பெற வேண்டிய வருமானத்தை பெற்றுக்கொள்ளாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சுவீகரிக்கப்படாத 03 அரச இல்லங்களிலிருந்து மீளாய்வாண்டு இறுதியில் பெற வேண்டிய ரூபா 315,695 ஆன நிலுவை வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை சபைக்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுத்ததன் பின்னர் அனைத்து அறவீடுகளையும் சட்டரீதியாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | புஸ்ஸெல்லாவ புதிய வியாபார கட்டிடத் தெதாகுதியில் 14 கடையறைகளிலிருந்து 2017 மற்றும் 2018 ஆண்டிற்காக எவ்வித கடை வாடகை தொகையொன்றும் பெற்றுக் கொள்வதற்கு முடியாமலிருந்தது. | சபைக்கு சொந்தமான சொத்துக்களிலிருந்து வருமானம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதி மன்றத்தில் வழக்கொன்று விசாரிக்கப்படுவதனால், பல வருடங்களிலிருந்து அவ் வாடகை இழக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

3.5.3 சுவீகரிக்கப்படாத சோத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமாக நிலவும் 37 இடுகாடுகளை சுவீகரித்திற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு சொந்தமாக நிலவும் சொத்துக்களை சுவீகரித்திற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இடுகாடுகளை சுவீகரித்திற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | சபைக்கு சொந்தமாக நிலவும் 89 காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக உறுதி அல்லது ஒப்படைக்கும் கட்டளை இருக்கவில்லை. | சட்டரீதியான உரிமைக்கான உறுதி அல்லது ஒப்படைக்கும் கட்டளை பெற்றுக் கொள்ள வேண்டும். | உறுதிகளைபெற்றுக் கொள்ள துரிதமாக நடவடிக்கை எடுக்கிறேன். |

3.5.4 விளைவற்ற/குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 டெக்டரகள் மற்றும் டேலர்கள், ஓர் மோடார் வண்டி மற்றும் க்ரு கெப் வண்டியொன்று 08 மாதங்களிற்கும் 10 ஆண்டுகளிற்கும் இடையிலான காலப் பகுதியொன்றினுள்விளைவற்று நிலவியது. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை விளைவற்று அழிவடைய சந்தர்ப்பம் அளிக்கக் கூடாது. | பழுதுபார்பதற்கு, ஏலவிற்பனை செய்வதற்கு மற்றும் பதிவை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ரூபா 4,420,000 பெறுமதியான 02 கட்டிடங்கள் 03 ஆண்டிற்கு மேற்பட்ட காலத்திலிருந்து குறைபயன்பாட்டுடன் நிலவியது. | சபைக்கு சொந்தமான கட்டிடங்களை பயனுள்ளதாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பயனுள்ள விதத்தில்ஈடுபடுத்த எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | ரூபா 262,199 பெறுமதியான ரோநியோ இயந்திரமொன்று, 02 அச்சு இயந்திரங்கள் மற்றும் பெறுமதியை இனங்காணாத ஜெனரேடரொன்றும் 07 ஆண்டிற்கு மேற்பட்ட காலத்திலிருந்து விளைவற்று நிலவியது. | விளைவற்று நிலவும் சொத்துக்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். | ரோநியோ இயந்திரத்தை மற்றும்02 அச்சு இயந்திரங்களை எதிர்காலத்தில் ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும்,தட்டெழுத்து இயந்திரத்தை பயன்படுத்துவதாகவும், ஜெனரேடரை பழுதுபார்பதற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |

3.5.5 வாகன பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு செந்தமான வாகனங்களுக்காக உரிய மேற்பார்வையின்றி சாரதியால் எரி பொருள் பெற்றுக் கொள்ளும் முறையொன்று பின்பற்றப்பட்டிருந்தது. | எரி பொருள் பெற்றுக் கொள்ளும் செயற்பாடு ஒழுங்காக செய்யப்பட வேண்டும் | மேற்பார்வை உத்தியோகத்திரின் மேற்பார்வையின் கீழ் நடவடிக்கை எடுக்க வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| புஸ்ஸெல்லாவ சந்தையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த கடையறைகளிற்குரிய நீர் மற்றும் மின்பட்டியளிற்காகரூபா 50,881 ஆன தொகையொன்று சபை நிதியதினால் செலுத்தப்பட்டிருந்தது. | குத்தகைநிபந்தனைகளுக்கு இணங்கி செயற்பட வேண்டும். | இவ்வாறு செலுத்தப்பட்டிருந்த நீர் கட்டணம் கடை உரிமையாளரிடமிருந்து அறவிடுவதற்க நடவடிக்கை எடுக்கிறேன். |

3.7 பெறுகைகள்

பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் மூலதன செலவினமாக ரூபா 32,777,803 மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்க வேண்டும். | எதிர் வரும் ஆண்டிற்கு பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |